டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, கண் பார்வை அற்றவர்கள் பேருந்துகளில் தாங்களாகவே ஏறி கண் மருத்துவ மனைக்குச் செல்ல முடியாது. அவர்கள் துணைக்கு ஒருவர் நிச்சயமாக செல்ல வேண்டும். அப்படி துணைக்குச் செல்லுகிறவர்களுக்கும் இத்தகைய பாஸ் வசதி செய்து கொடுக் கப்படுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் துணைக்குச் செல்பவர் களுக்குத்தான் வழங்கினோம் என்று சொன்னால், இதை ஏன் உறுப்பினர் கேட்டார் என்று புரியவில்லை. இருந்தாலும் இப் போதுதான் முதன் முறையாக அவர்களுக்குக் கொடுக்கிறோம். அடுத்தவர்களுக்கு சலுகை அளிப்பது பற்றி மீண்டும் சிந்திப் போம்.

கிராமங்களிலுள்ள முதியோர்களுக்கான உதவித்தொகை.

*வினா எண். 577— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கிராமங்களிலுள்ள தகுதி வாய்ந்த முதியோர்கள் அனைவருக்கும் முதியோர் பென்சன் கொடுக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதிசீனிவாசன்:

(அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தில் 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட ஆட்சியர்களால் அனுமதி வழங்கப்பட்டு தற்சமயம் 1,27,610 நபர்கள் உதவித்தொகை பெறுகின்றனர். மீதமுள்ளவர்களுக் கும் விரைவில் வழங்கப்படும். இதுதவிர தகுதி வாய்ந்த அனை வரும் முதியோர் உதவித் தொகை பெற வழி வகை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, முதியோர் உதவித்தொகைக்காக எல்லா வயதானவர்களும் போடுகிறார்கள். ஆனால் அப்படிப் போடும்போது அரசு பரிசீலனை செய்து அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அந்த முதியோர் உதவித் தொகை கிடையாது என்று சொல்லு

1981 மார்ச்சு 31] (திரு. இரா. தாமரைக்கனி)

கிறார்கள். இப்போதுள்ள குழந்தைகள் பெற்றோர்களுக்குச் சோறு போடாமல், சொத்துக்களை எல்லாம் பறித்துக் கொண்டு வீட்டை விட்டு விரட்டிவிடுகிறார்கள். அந்த வயதானவர்கள் தெருவிலே பிச்சை எடுக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, 65 வயதானவர்கள் எல்லோருக்கும் இந்த முதியோர் உதவித் தொகையைக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்களைக் கவனிப்பது என்பது பிள்ளைகளின் மனதைப் பொறுத்ததாக அமையும். ஏனென்று சொன்னால், சில பிள்ளைகள் தாய், தகப்பனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று எண்ணம் இருக்கும். சில பிள்ளைகளுக்கு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டாம் என்று எண்ணம் இருக்கும். இவை எல்லாம் பிள்ளைகளின் மனதைப் பொருத்துதான் அமையும். ஆகவேதான், பிள்ளைகள் இருக்கின்ற முதியோர்களுக்கு அரசாங்க உதவித் தொகை வழங்குவதில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, முதியோர் பென்சன் பெறுவதற்காக அப்ளிகேஷன் போட்டுவிட்டு 5 வருடம் 10 வருடம் என்று ஆகியும் கூட அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கின்றது. டெய்லி அவர்கள் திண்ணையில் உட்கார்ந்துக் கொண்டு போஸ்டுமேன் வருகிறாரா என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களில் அவர்கள் செத்த பிறகும் கூட வருகிறது. எனவே இது காலாகாலத்தில் கிடைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்றுதான் இப்போது செய்துக் கொண்டிருக்கிறோம். அரசு இதுவரையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உதவித் தொகை வழங்கப்படுகின்ற எண்ணிக்கைகளை குறிப்பிட்ட அளவே ஒதுக்கியுள்ளது. ஆனால் தற்போது இந்தத்திட்டத்தின் கீழ் ஆதரவற்ற, தகுதி வாய்ந்த முதியோர்கள் அனைவரும் உதவிபெற வேண்டும் என்பதில் அரசு தனிக் கவனமும் அக்கரையும் காட்டி வருகிறது. உதவித் தொகையை வழங்குவதற்கு மனுப்போட்ட இடங்களுக்குப் போதுமானதாக இல்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதினால் கூடுதல் இடம் வேண்டும் என்று அரசுக்கு அறிக்கை அனுப்பினால் அரசு அதைப் பரிசீலனை செய்யும். ஆகவே மனு செய்த எல்லோருக்கும் தற்போது உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டுவருகிறது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே முதியோர்கள், தங்களுக்கு உதவித் தொகை வேண்டும் என்று ஏராளமான பேர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டதா?

(திரு. சு. பாலன்) [1981 மார்ச் 31

இல்லையா என்கின்ற விவரம் பல மாதங்களுக்கு தெரிவதில்லை. எனவே அவர்கள் மனுச் செய்த 3 மாதங்களுக்குள் அவர்களுடைய மனு ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்று அவர்களுக்குக் குறிப்பு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் அரசாங்கத்திற்கு விவரம் எதுவும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அந்த மாதிரி விவரம் எழுதிக் கொடுப்பாரானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல் 10-00.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு, வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது, ஒரு இலட்சத்திற்கு அதிகமான நபர்களுக்கு பென்ஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். என்ன விதிமுறைகளைப் பின்பற்றி இவை கொடுக்கப்படுகின்றன? ஏற்கனவே அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு குழந்தைகள் இல்லை, 65-வயதுக்கு மேலாகிவிட்டது என்று எங்களைப் போன்றவர்கள் சான்றிதழ்கள் வழங்கி, மாவட்டக் கலெக்டருக்கு புலர் அனுப்பியிருந்தும் அவர்களுக்கு பதில் எதுவும் வரவில்லை. அது குறித்து இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாநிலத்தில் 1,51,224 நபர்களுக்கு உதவித் தொகை தருவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது எந்த அடிப்படையில் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 65 வயதுக்கு மேற்பட்டு, முதியோர்களாக இருந்தால் — ஆதரவற்ற முதியோர்களாக இருந்தால் — அவர்களுக்கு கண்டிப்பாக உதவித் தொகை வழங்கப்படும். நான் ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களுக்குக் கூறியதைப் போல், பிள்ளைகள் மனது வைத்தால் பெற்றோர்களுக்கு உதவி செய்கிறார்கள், சிலர் செய்வது இல்லை. மனம் இருந்தால் செய்யலாம் என்கிற நிலைமை இருப்பதால், பிள்ளைகள் இருப்பவர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுப்பது இல்லை.